தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.30 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Electricity Charges.

@ * 215 Q. THIRU KU. MA. BALASUBRAMANIAM (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have issued any order directing the agriculturists of Salem and Coimbatore districts to pay the arrears of charges for Electricity used for agricultural purposes, in instalments; and

(*b*) if so, whether this concession has been extended to other districts also?

மின் கட்டணம்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் செலுத்த வேண்டிய விவசாயத்துக்கான மின் கட்டண பாக்கித் தொகையை, தவணை முறையில் கட்டுவதற்கு அரசு உத்தரவு போட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இந்தச் சலுகை வேறு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதா?

@ 28-3-1978 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

Change of School Hours.

* 230 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers of Madras City have made a representation to the Government to change the school hours; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

பள்ளி வேலை நேர மாற்றம்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரத்திலுள்ள பள்ளி ஆசிரியர்கள் பள்ளி வேலை நேரத்தை மாற்றுமாறு அரசிற்கு முறையீடு செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ் : துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் மட்டுமல்ல, மாணவர்கள், பெற்றோர்கள் கூட கால நேரத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கருதுவதாகக் கூறப்படுகிறதே, அதனால் வருகிற கல்வி ஆண்டிலிருந்தாவது அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் கால நேரத்தை மாற்றியமைக்க கல்வி அமைச்சர் முன்வருவாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாணை நிலை எண் 1031 தேதி 5-6-1977-ன் படி பள்ளிகளின் வேலை நேரம் தென் சென்னைப் பள்ளிகளுக்கு காலை 8-30 என்றும் வட சென்னைப் பகுதிக்கு காலை 9 மணி என்றும் சென்னையில் உள்ள கல்லூரிகளுக்கு காலை 9 மணி என்றும் மாற்றியமைக்கப்பட்டன. இதுபற்றி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து முறையீடுகள் வந்தன. மறுபடியும் பரிசீலனை செய்து, பள்ளிக் கல்வி இயக்குநர் வேலை நேரத்தை கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கலாம் என்று தெரிவித்துள்ளார். அதன்படி தென் சென்னை காலை 9 மணி, வட சென்னை